# துறை பதவி உயர்வுக் குழு தொடர்பாக எழும் ஐயங்களும் அதற்கான விளக்கங்களும்

(FAQ on DPC Proposals)

| | | |
|---|---|---|
| 1 | அரசுத் துறைகளில் பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கும் போது ஏன் தேர்வாணையத்தின் ஆலோசனையைப் பெற வேண்டும்? | இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 320(3)(ஆ)-வின்படி, தேர்வாணையத்தை கலந்தாலோசிக்க வேண்டியது அவசியமாகிறது |
| 2 | தேர்வாணையத்தின் ஒழுங்குமுறை விதிகளில் எந்த விதியில் இதுபற்றி குறிப்பிடப்பட்டுள்ளது? | தேர்வாணைய ஒழுங்கு முறை விதிகளில் விதி 16-ல் குறிப்பிடப்பட்டுள்ளது |
| 3 | எந்தெந்த வகைப் பதவிகள் தேர்வாணையத்தின் துறை பதவி உயர்வுக்குழுவின் (DPC) செயல்பாட்டெல்லைக்குள் வரும்? | அரசாணை எண்.125, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (M) துறை, நாள் 13.11.2020-ல் வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, அவ்வாணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகள் யாவும் தேர்வாணையத்தின் துறை பதவி உயர்வுக்குழுவின் (DPC) செயல்பாட்டெல்லைக்குள் வரும். |
| 4 | பட்டியல் ஆண்டு என்பது எதைக் குறிக்கிறது? | குறிப்பிட்ட ஒவ்வொரு 12 மாத காலத்திற்கும் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும். ஒரு பட்டியலுக்கான 12 மாத காலம் எந்த / எந்தெந்த ஆண்டில் பரவியுள்ளதோ அந்த ஆண்டினை / ஆண்டுகளைக் குறிக்கும்.<br>**எ.கா.1:** ஒரு பட்டியலுக்கான காலம் 05.03.1994 முதல் 04.03.1995 வரை எனில், இதன் தொடர்புடைய பட்டியல் ஆண்டு 1994-1995 என்று அழைக்கப்படுகிறது.<br>**எ.கா.2:** ஒரு பட்டியலுக்கான காலம் 01.01.1994 முதல் 31.12.1994 வரை எனில் இதன் தொடர்புடைய பட்டியல் ஆண்டு 1994 என்று அழைக்கப்படுகிறது. |
| 5. | பட்டியல் தயாரிப்பில் அறுதி நாள் (Crucial date) என்பது என்ன? | அந்தந்த வகை பதவிகளுக்கான தனி விதியில், குறிப்பிடப்பட்டிருக்கும் அறுதி நாளில் அப்பதவிக்கான தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும். |
| 6 | காலிப்பணியிட மதிப்பீட்டுக்காலம் என்பது என்ன? | ஒவ்வொராண்டின் பட்டியலுக்கும் காலிப் பணியிட மதிப்பீட்டிற்காக கணக்கில் கொள்ளப்படும் 12 மாதங்களே காலிப் பணியிட மதிப்பீட்டு காலமாகும். |
| 7 | மதிப்பீட்டுக் காலம் என்பது எல்லா பதவிகளுக்கும் பொதுவான காலமாக இருக்குமா? | இல்லை.<br>1) தேர்வாணையத்தின் ஆலோசனை பெற அவசியமில்லாத பதவிகளுக்கு அப்பதவிக்கான விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அறுதி நாளிற்கடுத்த நாளிலிருந்து 12 மாத காலம் ஆகும்.<br>2) தேர்வாணையத்தின் ஆலோசனை பெற வேண்டிய பதவிகளுக்கு, தேர்வாணைய பதவி உயர்வுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பதவியுயர்வுக்கான தேர்ந்தோர் பட்டியல் அரசிற்கு அனுப்பப்படும் நாளிற்கடுத்த நாளிலிருந்து 12 மாத காலம் ஆகும். (அரசாணை எண். 603, பணியாளர் மற்றும் நிருவாகச் |

| | | |
|---|---|---|
| | | சீர்திருத்தத் துறை, நாள் 12.06.1985-ல் பத்தி 14-அ-ல், பிற்சேர்க்கை III தொடர்பாக திருத்தம் வெளியிடப்பட்ட அரசாணை எண்.97, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 21.04.1994). |
| 8 | பதவி உயர்வுக் குழுவிற்கு (DPC) எப்போது கருத்துரு அனுப்ப வேண்டும் ? | அரசுக்கு எப்போது அனுப்பப்படவேண்டும், பதவி உயர்வுக் குழுவிற்கு எப்போது அனுப்பப்பட வேண்டும் என்ற துறைவாரியான பதவிகளுக்கான திட்டம் அரசாணை எண். 603, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 12.06.1985-ல் பத்தி 14-அ-ல், பிற்சேர்க்கை III தொடர்பாக திருத்தம் வெளியிடப்பட்ட அரசாணை எண்.97, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 21.04.1994-ல் உள்ள பிற்சேர்க்கை IV- ல் விரிவான திட்ட அட்டவணை கொடுக்கப்பட்டுள்ளது. |
| 9 | ஏற்பளிக்கப்பட்ட பட்டியலில் பெயர் சேர்க்கப்பட வேண்டிய இனங்களுக்கும் (Re-opened cases) பதவி உயர்வுக் குழு கூடிதான் முடிவெடுக்க வேண்டுமா? | இல்லை.<br><br>பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் பரிந்துரையுடன் கூடிய கருத்துருவை தேர்வாணையத்திற்கு அனுப்பி, ஆணையத்தின் இசைவைப் பெற்றுக் கொள்ளலாம். |
| 10 | ஒற்றைச் சாளர முறையில், முழுமையாக தயாரிக்கப்பட்ட கருத்துருக்கள் மட்டும் தான் பரிசீலிக்கப்படுமா? கருத்துரு தயாரிப்பதில் ஏற்படும் ஐயங்களுக்கு ஆலோசனை பெறவியலுமா? | தொடர்புடைய, துறை அலுவலர்களுக்கு எழும் ஐயங்களுக்கு ஆலோசனை பெறலாம். |
| 11 | பட்டியல்கள் அல்லது காலிப்பணியிட மதிப்பீட்டுக் காலம் முடிவுற்ற நிலையில் தாமதமாக பட்டியல் இறுதி செய்யும் நிலையில் விடுப்புக்காப்புக்காகவும், எதிர்பாரா இனங்களுக்காகவும் கூடுதல் காலிப் பணியிடங்களை சேர்த்து காலியிட மதிப்பீடு செய்யலாமா? | கூடாது.<br><br>பட்டியல்காலம் முடிந்த நிலையில் பட்டியல் இறுதி செய்யப்பட்டால், அப்பட்டியல் காலத்தில் எழுந்த உண்மையான காலிப்பணியிடங்களை மட்டுமே கணக்கில் கொள்ள வேண்டும்.<br><br>பட்டியல் காலம் முடியுமுன்னரே, காலிப்பணியிட மதிப்பீடு ஒப்புதலளிக்கப்பட்டிருந்தாலும் பட்டியல் இறுதி செய்யப்படும் நாளில் பட்டியல் காலம் முடிவுற்றிருந்தால் விடுப்புக்காப்பு, எதிர்பாரா இனங்களுக்காக சேர்க்கப்பட்ட காலியிடங்களின் எண்ணிக்கையை நீக்கி, உண்மையாக எழுந்த காலிப்பணியிடங்களுக்கு மட்டுமே பட்டியல் இறுதி செய்யப்பட வேண்டும். |
| 12 | பதவி உயர்வுக் குழுவிற்கான கருத்துரு தொடர்பான ஐயங்களுக்கு எந்த அலுவலரை தொடர்பு கொள்ள வேண்டும் | செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் |

ஒம்./- ந. வரலட்சுமி,
துணை செயலாளர்
நாள் 29.04.2021

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்